सत्यमेव जयते

# இந்திய இலங்கை அறக்கட்டளை அமையம்

<u>கொழும்புச் செயலகம்</u>

## <u>ஊடக அறிக்கை</u>

### <u>திட்ட முன்மொழிவிற்கான அழைப்பு</u>

இந்திய இலங்கை அறக்கட்டளை அமையமானது பொருளாதாரம், விஞ்ஞானம், தொழில்நுட்பம், கலாசார ஒருமைப்பாடு ஆகியவற்றை மேம்படுத்துவதன் மூலம் இந்திய-இலங்கை மக்களுக்கிடையிலேயான புரிந்துணர்வை மேம்படுத்தி இந்திய-இலங்கை உறவை வளர்ப்பதற்காக 1998 இல் இந்திய-இலங்கை அரசாங்கங்களுக்கிடையே ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தினால் உருவாக்கப்பட்டது.

இந்திய இலங்கை அறக்கட்டளை அமையமானது தற்சமயம் கல்வி, கலை கலாசாரம், தொல்பொருளியல், விவசாய ஆராய்ச்சி, விஞ்ஞான தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம், சுகாதாரம், அபிவிருத்தியியல், பால்நிலைக்கல்வி ஆகிய துறைகள் சார்ந்த திட்ட முன்மொழிவுக்கான விண்ணப்பங்களை கோருகின்றது.

மேற்குறிப்பிட்ட முதன்மைப்படுத்திய துறைகள் தொடர்பான, இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையங்களில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளிற்கும், கல்வி நடவடிக்0ககளுக்கும் மற்றும் மாணவர்கள், ஆய்வாளர்கள், கல்வியாளர்கள், கலைஞர்கள், துறைசார் நிபுணர்கள், வினையுரு கலைஞர்கள் ஆகியோர் பங்குபற்றும் மாநாடு, கருத்தரங்குகள், கலைக் கண்காட்சி, திரைப்படவிழா, கலாசார நிகழ்வுகள், பயிற்சிப் பட்டறை ஆகியவற்றுக்கு வருகைதந்து கருத்துப்பரிமாறல் மேற்கொள்ளல் மற்றும் இந்திய-இலங்கை நல்லுறவு சம்பந்தமான தெரிவு செய்யப்பட்ட துறையில் ஆய்வறிக்கை வெளியீடு, இந்திய மொழிகளிலும், இலங்கை மொழிகளிலும் உள்ள இலக்கிய ஆய்வு வெளியீடுகளை முறையே இலங்கை மொழிகளிலும், இந்திய மொழிகளிலும் மொழிபெயர்ப்பு செய்தல் ஆகிய துறைகள் சம்பந்தமான திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிக்கலாம்.

2014 பெப்ரவரி மாதம் நடைபெறவிருக்கும் மன்றப் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் கவனத்தில் எடுப்பதற்காக தனிப்பட்டவர்கள், நிறுவனங்கள் மற்றும் குழுக்கள் ஆகியோர்களிடமிருந்து முன்மொழிவுகள் கோரப்படுகின்றன.

http://www/hcicolombo.org/pdf/India_Sri_lanka_Foundation_Form.pdf என்ற இணையத் தளத்திலிருந்து விண்ணப்பப்பத்திரத்தை தரவிறக்கம் செய்து, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை திட்ட முன்மொழிவுடன் இணைத்து 2014 ஜனவரி 25ம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

இந்திய இலங்கை அறக்கட்டளை அமையம்,
மே/பா. இந்தியத் தூதராலயம்,
36-38, காலி வீதி,
கொழும்பு – 03
தொலைபேசி: +94 11 2389924
மின்னஞ்சல்: islfcolombo@gmail.com